(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 135.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 மார்ச் 04, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1269/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள கட்டடங்கள் உள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி கட்டடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண வாரியாக வெவ்வேறாக எத்தனை;

(iii) மேற்படி கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் தாமதமாவதற்கு ஏதுவான பிரதான காரணங்கள் யாவை;

(iv) மேற்குறிப்பிட்ட கட்டடங்களில், 2025 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண வாரியாக வெவ்வேறாக எத்தனை;

(v) அக்கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படும் காலப்பகுதி யாது;

(vi) பகுதியளவில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டடங்கள் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை பணியாட்டொகுதிக்கும் ஆபத்தேற்படாத வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை;

(vii) மேற்படி கட்டடங்களைத் துரிதமாகவும் பாதுகாப்பாகவும் நிர்மாணித்து முடிப்பதற்கு பின்பற்றப்படும் செயன்முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1335/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான களஞ்சியசாலைகள் நெல்லை களஞ்சியப்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நெற் களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தக் கூடிய நெல்லின் அளவு வெவ்வேறாக மெற்றிக் தொன்களில் எவ்வளவு;

(iii) 2025 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற நெல் விளைச்சல் யாது;

(iv) மேற்படி விளைச்சலில், நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ள நெல்லின் அளவு மெற்றிக் தொன்களில் எவ்வளவு;

(v) மேற்படி நெல்லின் அளவு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிறு போகத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ள நெல் விளைச்சலின் வீதமாக எவ்வளவு;

(vi) 2025/2026 பெரும்போகத்தின் போது, நெல் விளைச்சலை அதிகரிப்பதற்காகத் தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1406/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசன குளங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி குளங்களின் கீழ் உள்ள மொத்த வயற் காணிகளின் பரப்பளவு யாது;

(iii) மேற்படி குளங்களில் தற்போது பயிர்ச்செய்கைக்காக நீர் வழங்கும் நீர்ப்பாசன குளங்களின் எண்ணிக்கை யாது;

(iv) இதன் மூலம் நீரைப் பெறும் வயற் காணிகளின் பரப்பளவு யாது;

(v) தற்போது பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேற்படி குளங்களின் கீழ் உள்ள வயற் காணிகளின் பரப்பளவு யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கைவிடப்பட்டுள்ள நீர்ப்பாசனக் குளங்களை எதிர்காலத்தில் புனரமைப்பதற்கான ஏதேனும் திட்டம் உள்ளதா;

(ii) ஆமெனில், புனரமைக்கப்படவுள்ள குறிப்பிட்ட நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் உள்ள வயற் காணிகளை, வயற் காணிகள் இல்லாத நபர்களுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1468/2025

கௌரவ சானக மாதுகொட,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் கீழ் விசேட விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு தென் மாகாணம் தெரிவு செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iii) 2025 ஆகஸ்ட் மாதமளவில் மேற்படி நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iv) விசேட விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு ஐந்து மாகாணங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1476/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் கீழ் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் திருகோணமலை மாவட்டத்தில் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்கள் மற்றும் அமுல்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள் வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) திருகோணமலை மக்ஹெய்ஸர் (Mc. Heyzer) விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்கள் யாவை;

(iv) 2026 வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் கீழ் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் திருகோணமலை மாவட்டத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*6.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

7.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] ‘‘சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக’’ எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---